ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

SRI VAISHNAVAN.

ஸ்ரீ வைஷ்ணவன்.

உண்மையறிவை உணர்த்தும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு "

தொகுதி 6.	1106-ம் ௵ பிரஜோத்பத்தி௵ ஆடிமீ	பகுதி 9.

நம்மாழ்வார் வணக்கம்

வங்கமலி கடலுலகி லெங்கணுங் காசு பெற
வைகறைத் துயிலெழுந்து
மலமற முகத்தினை யலம்பிப் பவித்திரம்
வலக்கையிலே யணிந்து
பங்கமற விருது நாமந்தரித்து நற்
பைம்பொனிற வட்சதையினைப்
பத்திரமதாகவே யுத்திரியம் வைத்துநற்
பரிசுருளு வென்றளித்துச்
சங்கைகளிலாது யான் கபவரைப் பாடிடச்
சாரா திருத்தி ஞானத்
தத்துவமதாகவே பத்தர் தொழுகின்ற நின்
றுவினைப் பாட வருள்வாய்
செங்கமல வாவி யிருபங்கினி னெருங்குறச்
செங்கயல்கள் துள்ளி யோடத்
திசைபொருவு பொருனை யிருகரை மருவு குருகை வரு
திருமருவு மகிழ்மாறனே.

ஸ்ரீ

"ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம்."

(ஆரியூர், வ பத்மநாப ராமாநுஜ தாஸன்.)

திருவனந்தாழ்வானது திருவவதாரமான இராமானுசரது சிஷ்யர்கள் பலருள் ஒருவரான அனந்தாழ்வார், தமது ஆசார்யரது கட்டளைக்கு இணங்க "சிந்துபூ மகிழும் திருவேங்கட" த்தில் ஸ்ரீநிவாஸனது திருவுள்ளம் உகக்கும்படி நந்தவனம் அமைத்து புஷ்பகைங்கர்யம் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில், திரு அரங்கம் பெரிய கோயிலில் நம்பெருமாளது செல்வப் புதல்வராக பகவத் ராமானுஜ தர்சனத்தை நிர்வகித்துக்கொண்டு வந்த பட்டரின் சிடர்களுள் ஒருவர், தமது ஆசார்யர் பணித்த வண்ணம் திருமலையை அடைந்து அனந்தாழ்வாரை ஸேவித்து உரையாடப்போதிய சாவகாசம் கிடைக்கப் பெறாமையால், அவரது திருமாளிகையின் வாசலிலேயே நெடு நேரம் மிக்க பொறுமையுடன் காத்து நின்றார். அச்சமயத்தில், அவரது பொறுமையைச்சோதித்தறிய திருவுள்ளம் கொண்ட அனந்தாழ்வார், அவரைக் கவனியாதவரே போல் தமது திருமாளிகையில் அமுது செய்துகொண்டிருந்த ஏனைய ஸ்ரீ வைஷ்ணவர்கள் பலரையும் உபசரித்து கொண்டிருந்துவிட்டு நெடு நேரம் கழிந்தபின் அரங்கத்தினின்றும் வந்திருந்த அவ்வன்பரிடம் சென்று "நெடு நேரமாயிற்றே; அமுது செய்யாமல் காத்திருப்பதே" என்று இரங்கியவராய் அவரை சடக்கென அமுது செய்தருளப் பண்ணிய பின் தம்மிடம் அவர் வந்த காரணம் என்னவென்று வினவியருளினார். அவ்வன்பரும் "பட்டர் தேவரீரிடம் சென்று ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம் இருக்கும்படி எங்ஙனே என்று கேட்டுவரச் சொல்லி அனுப்பி வைத்தருளினார்" என்று தெரிவித்தார்.

அது கேட்ட அனந்தாழ்வார், ஸ்ரீ வைஷ்ணவ லட்சணமானது,

1. கொக்கைப்போலிருக்கும்: 3. உப்பைப்போலிருக்கும்,
2. கோழியைப்போலிருக்கும், 4. உம்மைப்போலிருக்கும்.

என்று அருளிச்செய்து அவருக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

அவ்வன்பர் அப்பொன் மொழிகளின் உட்பொருளை ஆழ்ந

து சிந்தித்தலும், பின் வரும் பொருள்களைத் தெளியப்பெற்று பெரிதும் இன்புற்றார்.

1. கொக்கைப்போல் இருத்தலாவது.

கொக்கு மிக்க வெண்ணிறம் வாய்ந்ததாக இருப்பதுபோல, ஸ்ரீ வைஷ்ணவன் உள்ளொன்று வைத்துப்புறம்பொன்று பேசும் கள்ள உள்ளமின்றி தூய்மை மிக்க நன்னெஞ்சத்தை உடையவனாகி இருப்பான். மற்றும் அப்பறவை குளம் முதலிய இடங்களில் பொறுமையோடு காத்திருந்து சிறிய மீன்கள் கரைக்கு வரும்போதெல்லாம் அவற்றைப் புறக்கணித்து விட்டு, தனக்கு விருப்பமான பெரிய மீன் கரையை அடுத்தவுடனே விரைந்து கவ்விக்கொள்ளும் இயல்புடையது. அதுபோல; வைணவனும் தனது வாழ்க்கையில் நண்பர் உறவினர் முதலிய பலரோடும் கலந்து பழக நேர்ந்தாலும், தாமரை இலைத் தண்ணீர்போன்றும் புளியும் அதன் ஓடும் போன்றும் அத்தகையவரோடு கலந்தும் கலவாது வாழ்ந்திருந்து, தனது ஆன்மாவை உய்விக்கக்கூடிய நல்லாசிரியனைக் கண்டவிடத்தில், அவ்வாசிரியனது அடியிணைகளையே உபாயமாகப்பற்றிக்கொண்டு,"செவிக்கு உணவு இல்லாதபோது சிறிதுவயிற்றுக்கும் ஈயப்படும்."என்ற குறட்பாவுக்கு இணங்க கேள்விச் செல்வத்தில் பேரார்வங்கொண்டு, அவ்வாசிரியரிடத்தினின்றும் உயிர்க்கு உறுதி பயக்கக்கூடிய உண்மைப்பொருள்கள் பலவற்றையும் கேட்டு உணர்ந்து, தான் உணர்ந்தவைகட்கு இணங்க சீரிய நன்னெறி மேற்கொண்டு ஒழுகுவான்.

2. கோழியைப்போல இருத்தல்.

கோழியானது குப்பையைக் கிளறி தனக்கு உணவாக கிடைப்பனவற்றை எடுத்துக்கொண்டு தானும் உண்டு தனது குஞ்சுகட்கும் ஊட்டும் இயல்புடையது. அதுபோல ஸ்ரீ வைஷ்ணவனும் பலவித குழப்பங்களை விளைவிக்கும சாத்திரக் குப்பைகளைத் துருவி யாராய்ந்து துன்பப்படாது, நான்மறைகளிலுள்ள அரும்பொருள்களை விவரிப்பனவும தெளிவான சாரமான பொருள்களைப் போதிப்பனவும் பக்தியை ஊட்டுவனவுமாய திருவாய்மொழி முதலிய தமிழ் மறைகளை ஓதி அவற்றின் அர்த்த விசேஷங்களை அறிந்து தானும் அனுஷ்டித்து பிறருக்கும் உபதேசித்து உள்ளம் உவகை எய்துவான்.

3. உப்பைப்போல இருத்தல்.

உப்பானது ஒரு பதார்த்தத்தில் கலக்கப்பட்டபோதுதான் கரைந்து போய்விட்டாலும் அப்பதார்த்தத்தோடு இரண்டறக் கலந்து தனது சுவையை வெளியிட்டு நிற்கின்றது. தான் அழிய மாறியும் தன்னை உபயோகிப்பவர்கட்கு உவப்பை ஊட்டும். அதன் உருவமே அழிந்து அப்பதார்த்தத்தோடு இரண்டறக் கலந்து போய்விடும். அதுபோல ஸ்ரீ வைஷ்ணவனும் ஆடம்பர வாழ்வைத் துறந்து தன்னை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அடக்கமாக வாழ்ந்து வந்தாலும், தனது சீடர்கள் பெரும் புகழ் பெற்று விளங்குவதற்கு காரணமாக இருப்பான். (சண்டு பெரிய நம்பிகளையும் அவரது சீடர் உடையவரையும், ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸரையும் அவரது சீடர் விவேகானந்த சுவாமிகளையும் நினைவு கூர்க.) மற்றும், தான் பல துன்பங்களையும் அனுபவித்தாலும், தன்னைச் சார்ந்தவர்களிடத்தில் மிக்க சந்தோஷமாகவே நடந்துகொள்வான். இவ்வாறு கீர்த்தியையும் ஆடம்பரத்தையும விரும்பாமல், ("பெருக்கத்துவேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு") என்ற குறளுக்கு இணங்க 'யான்' 'எனது' என்னும்செருக்குகளை அகத்தினின்றும் அறவே அகற்றி ஆண்டவனது திருவுள்ளம் உகக்கும் வகையில் தமது வாழ்க்கையை நடத்திவந்து, இறுதியில் அச்சீரிய வைணவன் இறைவனது இணையடிகளில் இரண்டறக்கலந்து இன்பம் துய்ப்பான்.

4. உம்மைப்போல இருத்தல்.

என்று அனந்தாழ்வார் தம்மைக்குறித்து அருளிச்செய்த தன் காரணம் எதுவாக இருக்கலாம் என்பதைப்பற்றி அந்த ஸ்ரீ வைஷ்ணவர் பெரிதும் யோசித்தார். தாம் அவரது திருமாளிகையை அடைந்து வாசலில் நெடு நேரம் காத்துக்கொண்டிருக்க நேர்ந்தும், சிறியார்க்கு உரிய சினத்தை சிறிதளவும் கொள்ளாது இறுதி வரையில் மிக்க பொறுமையாக இருந்தது தம்மை அன்பர்கள் விஷயத்தில் அபசாரப்படாவண்ணம் காத்தது என்பதை உணர்ந்தார். அத்தகைய பொறுமையை தமக்கு அளித்தருளி ஸ்ரீ வைஷ்ணவ லட்சணத்தை உணர்த்துவித்தருளிய இறைவனது இன்னருளை எண்ணி எண்ணி பெரிதும் இன்புற்று நின்றார்.

"பார்க்கும் இடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற" பரம் பொருள் ஆகிய விஷ்ணு ஸம்பந்தத்தால், 'ஸ்ரீ வைஷ்ணவர்கள்' எனும் ஒப்பற்ற சிறப்பைப்பெற்ற உத்தமர்களே! பகவத் கைங்கர்யமும் பகவத் கல்யாண குணாநுபவமுமே பரம சம்பத்தாக பாவிக்கும் பக்திமான்களே! அனந்தாழ்வார் அறிவுறுத்தியருளிய ஸ்ரீ வைஷ்ணவ லட்சணத்திற்கு இயைந்த சிறந்த தூய முறையில் வாழ்வு நடாத்தி, திருமகள் கேள்வனது திரு அருளுக்கு இலக்காகி இருமையிலும் இன்பம் துய்ப்பீர்களாக. திருஅருள் முன்னிற்க.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்-வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

கிருஷ்ணாவதாரச் சிறப்பு.

கண்ணன் வேய்ங்குழலூதல்.

முன் இரண்டு அத்தியாயங்களில் எம்பெருமான் கிருஷ்ணனாக அவதரித்து இந்த லீலா விபூதியில் செய்தருளின சௌலப்ய குண சேஷ்டிதங்களை பொதுவாக விவரித்தோம். கண்ணனாக, பெருமாள் கோகுலத்தில் எழுந்தருளியிருக்கும்பொழுது தன்னுடைய பால்ய பருவத்தில் விளையாடிய பால லீலைகள் பல உள. அவைகளில் எம்பெருமான் தன்னுடைய வேணு கானத்தினால் சகல சேதன, அசேதன பொருள்கள் யாவற்றையும் மயக்கி தன்னுடைய சோதியில் லயிக்கும்படியாய்ச் செய்த லீலையே மிகவும் வியக்கத்தக்கது.

"பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவற்கு ஓர் கீழ்க் கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி இங்கே போதக்கண்டீரே
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி
விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே."

என்று ஆழ்வார் பாடியருளியபடி எம்பெருமான் தன்னுடைய கோக்களை தினந்தோறும் பிருந்தா வனத்துக்கு ஓட்டிக்கொண்டு போய் அவைகளை நன்றாக குளிப்பாட்டி அவைகளுக்கு வேண்

டியபடி நீரூட்டி, ஒரு பக்கமாக அவைகளை விட்டு விட்டு, தன்னுடைய தோழர்களான தன்னோராயிரம் பிள்ளைகளோடு கூடி யமுனாநதிக்கரையில் தன் இஷ்டப்படி விளையாடுவார். பரந்தாமனுடன் கூட வரும் இளஞ்சிறுவர்களும் தங்களுக்குகந்த விளையாட்டுகளை விளையாடுவார்கள். எல்லா விளையாட்டுகளுக்கும் கண்ணபிரானே தலைமை வகித்து வருவார். ஒரு நிமிஷமேனும், கண்ணன் பக்கத்தில் இராவிடில் மற்ற இடைப்பிள்ளைகளுக்கு ஒரு யுகமாகத் தோன்றும், இவ்விதமாக பலராமனும், கிருஷ்ணனுமாக யமுனா நதிக்கரையில் பகல் முழுவதும் சகலவிதமான சேஷ்டிதங்களையும் செய்துகொண்டு உலாவி வருவார்கள். இப்படியிருக்கும்பொழுது ஒரு சமயம் கண்ணன் தனது சிரோபாதத்தில் ரத்ன பூஷணங்களுடன், மயில் தோகைகளினுடைய காந்தி விளங்கவும், சிந்தூரமிலங்க தன் திருநெற்றிமேல் திருத்திய கோறம்பும், நெறித்த குழல்கள் இரண்டு பக்கமும் அழகாக அலையவும், இரண்டு செவிகளில் அணியப்பெற்ற திருக்குண்டலங்களின் ஒளியானது கண்ட பாகங்களில் பிரகாசித்து அரையில் தங்கிய பீதக வாடையினது ஒளி வீசவும், முத்து போன்ற பற்கள் பிரகாசிக்கவும், பெரிய பிராட்டி அகலகில்லேன் என்று எப்பொழுதும் நித்தியவாசஞ்செய்தருளப்பெற்ற விசாலமானமார்பானது தன்னிடத்தில் அணியப்பெற்றபூஷணங்களினால்பிரகாசிக்கவும், பரமயோகிகளினுடைய மனதாகிய தாமரைக் காயினிருப்பிடமாக உடையபதும முதலிய ரேகைகளினால் அலங்கிருதமாகிய ஸ்ரீசரணாரவிந்தங்களையும், சர்வபுவனமோகனகரமாயும் விசித்திரவர்ணங்களால் அலங்கிருதமான மந்த்ரஸ்வரங்களை வருஷிக்கின்றதாய் விளங்குகின்ற திருப்புல்லாங்குழலை தமது திவ்விய அதரத்தில் வைத்து, ஒரு ஏகாந்தமான இடத்தில் இருந்துகொண்டு குழலோசை பாட ஆரம்பிப்பார். சாதாரணமாக மாயவலையிலகப்பட்ட கலியுக சேதனனை ஒருவன் சங்கீத ஞானம் பெற்று புள்ளாங்குழல் ஊதினாலேயே செவிகளுக்கு மிகவும் ஆனந்தமாக இருக்கும்பொழுது சகல வேத சாஸ்திரங்களுக்கும் சங்கீத ஞானத்துக்கும் இருப்பிடமாகிய எம்பெருமானே தன்னுடைய திரு அதரத்தில் வைத்து வேணுகானம் செய்ய ஆரம்பித்தால் அதை அனுபவிக்க ஆயிரம் செவிகள் படைத்த ஆதிசேஷனும் தனக்கு ஆயிரம் செவிகள் போதா என்று

குறைபடக் கேட்கவும் வேண்டுமோ! எம்பெருமான் வேணுகானம் செய்ய ஆரம்பித்துவிட்டால் பிருந்தாவனத்தில் வாசஞ்செய்கின்ற தபோமூர்த்திகள் தங்கள் யோகத்தையும் சிலகாலம் மறந்து குழலினிமையை கேட்டு அனுபவிப்பார்கள். மற்ற கோபாலச்சிறுவர்கள் தங்களுடைய விளையாட்டுகளை விட்டு விட்டு கண்ணனையும் அவனுடைய புல்லாங்குழலையுமே உற்றுப்பார்த்துக்கொண்டு இருப்பார்கள். கோகுலத்தில் வீட்டு வேலைகளை பார்த்துக்கொண்டிரா நின்ற கோபஸ்திரிகள் கண்ணனுடைய குழலின் ஓசையை கேட்ட மாத்திரத்தில் தங்கள் தங்கள் வேலைகளை அப்படியே விட்டு விட்டு யமுனாதிக்கரைக்கு ஓடிவருவார்கள். அப்படி அவர்கள் ஓடிவரும் அவசரத்தில் தங்களுடைய மலர்க்கூந்தல் அவிழ, அரையில் கட்டிய உடை நெகிழ, ஓர் கையால் துகில்பற்றி ஓடி வருவார்கள் வீட்டில் ஒருவரும் இல்லாமை கண்டு கோபாலர்கள் மிகவும் கோபங்கொண்டு தங்களுடைய பத்தினிகளைத் தேடி கண்ணனிருக்குமிடம் வந்து சேருவார்கள் அப்பொழுது எம்பெருமான் நடுவிலும் அவரைச்சுற்றிகோபஸ்திரிகள் குரவை கோத்து விளையாடுவதையும் அதற்கேற்ப பெருமான் தன்னுடைய குழலினால்

"இடவணரை இடத்தோளொடு சாய்த்து
இருகை கூடப்புருவம் நெரிந்தேற
குடவயிறு படவாய் கடை கூட"

குழலூதிக்கொண்டு இருப்பதையும் பார்த்து தாங்கள் வந்த காரியத்தையும் மறந்து எம்பெருமான வேணுகானத்தில் லயப்பட்டு தங்கள் தங்கள் மனைவிகளோடு கூடி குரவை கோத்து ஆடுவார்கள். சேதனர்களாகிய மனிதர்கள் பாடு இப்படி என்றால் எம்பெருமான் குழலோசையைக் கேட்ட மாடுகளும் பறவைகளும் என்ன விதமாயின என்பதை ஆழ்வார் பின் வருமாறு வர்ணிக்கிறார்.

சிறுவிரல்கள் தடவிப்பரிமாற
செங்கண்கோட, செய்யவாய் கொப்பளிப்ப
குறுவியர் புருவம் கூடலிப்ப
கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டு
கவிழ்ந்திறங்கி செவியாட்ட கில்லாவே"

என்றும், "மருண்டமான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர இரண்டு பாடும் துலங்காப்புடை

பெயரா எழுது சித்திரங்கள் போல நின்றனவே" என்றும் இவ்விதமாக உயிருள்ள பிராணிகள் எல்லாம் ஸ்ரீயப்பதியின் வேணுகானத்தை பலவிதமாக அநுபவித்துக்கொண்டிராநின்றன ஸ்தாவர வஸ்துக்களான மரங்கள் கொடிகள் முதலானவைகள் கூட வேணுகானத்தை கேட்டு மனமுருகிக்கிடந்தன என்பதை ஆழ்வார் பின்வருமாறு கூறுகிறார்.

"கருங்கண் தோகை மயில் பீலி அணிந்து
கட்டி நன்குடுத்த பீதகவாடை அருங்கல உருவில்
ஆயர் பெருமான் அவனொருவன் குழல் ஊதினபோது
மரங்கள் நின்றும் மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும்
வளர் கொம்புகள் தாழும் இரங்கும் கூம்பும் திருமால்
நின்ற நின்ற பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே"

என்ற மாதிரியாக மரங்களும், மலர்களும், கொம்புகளுமான ஸ்தாவர வஸ்துக்கள் இப்படி அநுபவித்தால் மற்ற ஜீவராசிகள் மயக்கவும் கேட்க வேண்டுமோ. பூலோகத்தில் பிருந்தாவனத்தில் இவ்விதமாக கண்ணனுடைய வேய்க்குழலோசையை அநுபவிக்கும்பொழுது தேவலோகத்தில் நடனம் செய்யாநின்ற அரம்பை, ஊர்வசி முதலிய நாட்டியப் பெண்கள் கதி என்ன வாயின என்றால், வானிலவராக வைகுந்தக் குட்டனாகிய வாசுதேவன் வாயிலிருந்து கிளம்பிய வேணுகானம் அவர்களுடைய செவியைப்பற்றி இழுக்க, அவர்கள் தங்களுடைய ஆடல் பாடல் முதலியவற்றை மறந்து அதனால் வெட்கப்பட்டு கோவிந்தனுடைய குழலின் ஓசையைக் கேட்பதற்காக ஆகாய வீதியில் வந்து நிறைந்தார்கள். ஆகாய வீதியில் திரிந்துகொண்டிரா நின்ற தும்புரு மகரிஷியும் நாரதரும் தங்களுடைய வீணையை மறந்து எம்பெருமான் வேணுகானத்தை அநுபவித்தபிறகு தங்களுடைய கின்னரங்களை தொடமாட்டோம் எனது வீசி யெறிந்தார்கள். இந்த விதமாக ஆகாயத்தில் தேவர்களும், பூலோகத்தில் கோபாலர்களும்பரமாத்மாவின் வேணுகானத்தை அநுபவித்துக்கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் நாம் ஒரு புல் பூண்டாகவாவது பிறந்து கண்ணனுடைய மதுர கானத்தை அநுபவித்து இருந்தால் நமக்கு இந்த ஜன்மம் கிடைத்திரா. ஆகையால் ஒவ்வொருவரும் இந்த லீலா விபூதியில் "ஓடி ஓடி பல பிறப்பும் பிறவாமல் எம்பெருமானுடைய நாமங்களை நாவினால் பாடி மனத்தினால் சிந்தித்து மோட்சமடைவோமாக.

இவ்விதமாக எம்பெருமான் பகல் முழுவதும் தன் தோழர்களோடு காடுகள் முழுவதும் விளையாடிவிட்டு அந்தமன காலத்தில் மாடுகளை ஓட்டிக்கொண்டு கோகுலம் வந்து சேருவர்.